இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 04-09-2025

# சாதனையைச் சகித்துக் கொள்ள முடியவில்லையா?

ஒவ்வொரு முறையும் தமிழ்நாடு அரசு ஒரு சாதனையைச் செய்யும் போதும், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு பாராட்டைப் பெறும் போதும் கையாலாகாத தற்குறி மனிதர்கள் சிலர், 'தி.மு.க. தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை' என்று பேட்டி தருவது வழக்கம்.

ஒன்று கூட நிறைவேற்றவில்லை, 98 விழுக்காடு நிறைவேற்றவில்லை, 95 விழுக்காடு நிறைவேற்றவில்லை என்று வாய்க்கு வந்தமாதிரி பேட்டி அளித்து, தங்களது இயலாமையை தாங்களே மெச்சிக் கொள்வார்கள்.

இவை அனைத்துக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னையில் அளித்த பேட்டியானது சரியான பதிலாக மட்டுமல்ல, பதிலடியாகவும் அமைந்துள்ளது. மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் வைத்து கூட்டாகக் கொடுத்த பேட்டியில்தான் இதனைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

**★ கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பாக 505 தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்திருந்தோம். அந்தத் தேர்தல் வாக்குறுதியில் அனைத்தும் 24.06.2021 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் செயலாக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு இவை அனைத்தும் தொலைநோக்குத் திட்டங்களாக அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.**

**★ 505 வாக்குறுதிகளை திட்டங்கள் என்று சொன்னால், 364 திட்டங்களுக்கு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் மிகப் பெரும்பான்மையான திட்டங்கள் முடிவு பெற்றிருக்கிறது.**

**★ அரசின் பரிசீலனையில் இப்போது இருக்கக்கூடிய 40 திட்டங்கள் ஆகும். இதனையும் சேர்த்தால் மொத்தமாக 404 திட்டங்கள் அரசின் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.**

**★ 37 திட்டங்கள் ஒன்றிய அரசின் பரிசீலனைக்கு நிலுவையில் உள்ளது.**

**★ 64 திட்டங்கள் தற்போதைக்கு எடுத்துக் கொள்ளப்படாத திட்டங்களாக உள்ளன.**

இவற்றை வெறும் வார்த்தைகளாகச் சொல்லவில்லை. துறை ரீதியாக அறிவிக்கப்பட்டது எவ்வளவு, அதில் எத்தனை நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை Powerpoint Presentation மூலமாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். இவை அனைத்தும் பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகள், ஒன்றிய அரசிலிருந்து தேவையான, போதிய நிதி வராத சூழ்நிலை இவற்றுக்கிடையில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஆகும். தொலை நோக்குத் திட்டங்களில் அறிவிக்கப்பட்டதையும், நிறைவேற்றப்பட்டதையும் அமைச்சர்கள் விவரித்துள்ளார்கள்.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் சொல்லி, அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டு, தொலைநோக்குத் திட்டங்களாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்தும் விரிவான விளக்கம் அமைச்சர்களால் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் நலத்துறையில் 7 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு ஏழும் நடைமுறையில் இருக்கிறது. வேளாண்மை - உழவர் நலத்துறையில் 40 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதில் 37 திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளது. கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் 34 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதில் 29 திட்டங்கள் நடைமுறையில் இருக்கிறது. கைத்தறி - கைத்திறன் - துணிநூல் - கதர் துறையின் மூலமாக 14 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதில் 13 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டது.**

**நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையில் அறிவிக்கப்பட்ட 14 இல் 12 திட்டங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டது. தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் 15 அறிவிப்புகள் செய்யப்பட்டு 10 அறிவிப்புகள் இப்பொழுது நிறைவேற்றப் பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 23 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு 20 திட்டங்கள் நடைமுறைக்கு வந்திருக்கிறது.**

**பள்ளிக்கல்வித் துறையில் 22 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதில் 17 திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் சார்பில் 19 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு 15 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சுற்றுலா பண்பாட்டுத் துறை சார்பில் 24 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு 23 திட்டங்கள் செயலாக்கத்தில் இருக்கிறது.**

தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தேர்தலுக்கு முன்னதாக தொகுதி தோறும் சென்று மக்களிடம் மனுக்களைப் பெற்றார். அதனை 100 நாட்களில் நிறைவேற்றுவேன் என்று வாக்குறுதி அளித்தார். 100 நாட்களுக்குள் தகுதியுடைய அனைத்து மனுக்களையும் நிறைவேற்றினார். அதன்பிறகு மக்கள் மனுக்களைத் தர, 'முதல்வரின் முகவரி' என்ற தனித்துறையை உருவாக்கினார்.

மக்கள் தங்களது கோரிக்கைகளை அரசாங்கத்தை, அமைச்சர்களை, அதிகாரிகளைத் தேடிப் பார்த்துக் கொடுக்கும் காலம் மாறி, அரசாங்கமே மக்களைச் சந்தித்து, 'கோரிக்கை இருக்கிறதா? மனுவாகத் தாருங்கள்' என்று கேட்கும் காலமாக இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றி இருக்கிறார்கள். 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம் மூலமாக 30 லட்சம் மனுக்கள் அரசாங்கத்துக்கு வந்திருக்கிறது. அதாவது, மக்களிடம் வலியப் போய் மனுக்களைப் பெற்று அதனை நிறைவேற்றித் தரும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் உண்மையான 'மக்களாட்சி' ஆகும்.

இவற்றுக்குப் பிறகும், **'தி.மு.க. கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை' என்று சில கையாலாகாத கூமுட்டைகள் சொல்லும். ஆனால் அதை அவர்களது கட்சிக்காரர்களே இனி நம்ப மாட்டார்கள்.**

●●

## ஜெர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு

# இங்கிலாந்து வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## லண்டன் வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு!

**லண்டன், ஏப்.4-**

**ஜெர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்குச் சென்றார். அங்கு, லண்டன் வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**



தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ஜெர்மனி பயணத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு மொத்தம் 7 ஆயிரத்து 20 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. ஜெர்மனி நிறுவனங்களுடன் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாட்டில் 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இங்கிலாந்து சென்றுள்ளார். லண்டன் விமான நிலையத்தில் திரண்ட தமிழர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர், முதலமைச்சருடன் ஆர்வத்துடன் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

இதனிடையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், இங்கிலாந்தில் கால் வைத்ததும் தமிழர்களின் பாசத்தால் அரவணைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். லண்டனில் அளிக்கப்பட்ட வரவேற்பு நெகிழ்ச்சியளிப்பதாகவும் அவர் கூறி யுள்ளார்.

இங்கிலாந்து பயணத்தில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார். தொழில்முனைவோரையும், முதலீட்டாளர்களையும் சந்தித்து உரையாட உள்ளார். முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் பங்கேற்கிறார். அப்போது, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. பின்னர், லண்டனில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்துக்கு நாளைய தினம் செல்லும் முதலமைச்சர், அங்கு அயலகத் தமிழர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொள்கிறார். அப்போது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருக்கும் தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்து உரையாற்ற உள்ளார்.

### இங்கிலாந்தில் பாசத்துடன் அரவணைக்கப்பட்டேன்!

**இங்கிலாந்து வருகை தந்தது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில்,**

**"இங்கிலாந்தில் கால் பதித்தேன். தொலைதூரக் கரைகளைக் கடந்து சென்றும் வீட்டில் இருப்பது போன்ற உணர்வை அளித்ததோர் வரவேற்பினால் அன்புடனும், பாசத்துடனும் அரவணைக்கப்பட்டேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.**

## ஜெர்மனி – இங்கிலாந்து நாடுகளில் தொழில் முதலீடுகளை ஈர்த்து

## 8–ஆம் தேதி காலை வெற்றிகரமாக தாயகம் திரும்பும்

# முதல்வர் - மு.க.ஸ்டாலினுக்கு சென்னை விமான நிலையம் முன்பு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, செப். 4–

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி – இங்கிலாந்து நாடுகளுக்கு சென்று வருகிற 8–ஆம் தேதி காலை வெற்றிகரமாக தாயகம் திரும்பும் தமிழ்நாடு முதல்வர் – தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையம் முன்பு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கோலாகலமான வகையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது என்று என்று மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம், ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பத்மாப்ரியா, பரிதி இளம்சுருதி, எஸ்.எம்.கே.அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், இ.எஸ்.பெர்னாட்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கிருத்திகா தேவி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், கே.எத்திராஜ், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், சே.அருள்தேவி, மு.ரஞ்சன், செல்வகுமார், ஜிஜேந்திரன் ராமு, கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், டி.கே.கமலக்கண்ணன்,



கே. மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, உதயா கருணாகரன், எஸ்.ஆல்பர்ட், ஜா. செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், சசிகலா, டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரிய நாயகம், பெப்சி கண்ணன், முகலிவாக்கம் தங்கம் வாட்ஸ், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இரங்கல் தனி தீர்மானம்:–

கழகப் பொருளாளர் – கழக மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியார் ரேணுகா தேவி தாம்பரம் மாநகரம் – மாவட்டக் கழகப் பிரதிநிதி குளத்துமேடு மு.நாகலிங்கம், பம்மல் வடக்கு பகுதி – அனகாபுத்தூர் 1–வது வட்டக் கழக அவைத் தலைவர் என்.சி. மோகன்,

பம்மல் வடக்கு பகுதி அனகாபுத்தூர் கழக முன்னோடி பா.து.ஜெயபாலன் பெருங்களத்தூர் தெற்கு பகுதி பீர்க்கன்காரனை 59–வது வட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி. சரஸ்வதி மற்றும் அவரது கணவர் ஜீவானந்தம், குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சி புளியந்தோப்பு கிளை ஒன்றிய பிரதிநிதி மெர்சி,

தாம்பரம் கிழக்கு பகுதி துணை செயலாளர் ராஜாராம் அவர்களின் தாயார் முன்னாள் மாடம்பாக்கம் பேரூராட்சி மன்றத் தலைவர் சி.தசரதன் அவர்களின் மனைவி காஞ்சனா அம்மாள், ஆலந்தூர் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பிரவீன்குமார் அவர்களின் மாமா மோகன் ஆகியோரது மறைவுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டின் மண்–மொழி–மானம் காத்திடவும், தமிழ்நாட்டின் உரிமைகளை காத்திடவும், "ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர்கள் சேர்க்கை திட்டத்தின் கீழ்.

"எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியின் சீர்மிகு திட்டங்களை கழகத்தினர் வீடு வீடாகச் சென்று மக்களிடன் விளக்கி கூறி கழகத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியை முன்னெடுக்க வேண்டும் என்று நம்முடைய உயிரனைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் நிர்ணயிக்கப்பட்ட 40% இலக்கை மிஞ்சி கழகத்தில் உறுப்பினர்கள் சேர்ப்பதற்காக இரவு – பகல் பாராமல் அயராது உழைத்திட்ட.

மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர – ஒன்றிய – நகர – பேரூர் வார்டு– கிளைக்கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA–2), மாவட்ட – தொகுதி – ஒன்றிய – நகர – பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் BOOTH DIGITAL AGENT (BDA), வாக்குச்சாவடி தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் (BLC), உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினருக்கும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர்கள் சேர்க்கை திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் சேர்க்கை படிவத்தில் புதிய உறுப்பினர்களை சேர்த்த கழக உறுப்பினர் படிவங்களை அந்தந்த ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் செயலாளர்கள் உடனடியாக வட்ட – கிளைக் கழகச் செயலாளர்களிடம் இருந்து பெற்று வருகிற 10.9.2025–ஆம் தேதிக்குள் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் தங்களது தொழில் முதலீடுகளை செய்திட பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிதுணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு, வெற்றிகரமாக தொழில் முதலீடுகளை ஈர்த்த நம்முடைய ஒப்பாரும் – மிக்காரும் இலா அன்புத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் தமது பயணத்தை முடித்துக்கொண்டு வருகிற செப்டம்பர் 8–ஆம் தேதி திங்கள்கிழமை காலை 7.00 மணியளவில் தாயகம் திரும்புகிறார்.

தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சென்னை விமான நிலையம் புளூகேட் அருகில் பிரமாண்டமான வரவேற்பு அளிப்பது என்றும்,

இந்த மாபெரும் வரவேற்பில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு கழக கொடி – வரவேற்பு பதாகைகளை ஏந்தி நம்முடைய ஒப்பற்ற தலைவருக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

வருகிற செப்டம்பர் 10–ஆம் தேதி அன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் கூட்டம் மறைமலைநகர் ஆழ்வார் பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பின்னர், காலை 11.00 மணியளவில் செங்கல்பட்டு தொகுதியில் அடங்கி உள்ள கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் மறைமலைநகர் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற உள்ளது என்றும்,

இக்கூட்டங்களில் இளைஞர்களின் இதயம் கவர்ந்த இனிய தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டங்களில் செங்கல்பட்டு தொகுதி இளைஞர் அணி பாக அமைப்பாளர்களும், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி வார்டு – கிளை அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பித்திட காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

வருகிற செப்டம்பர் 10–ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் குன்றத்தூர் சேக்கிழார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் திருப்பெரும்புதூர் மற்றும் ஆலந்தூர் தொகுதிகளில் உள்ள 7000 ஏழை – எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாவை மாண்புமிகு துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்.

பின்னர் மாலை 7.00 மணியளவில் குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலையை திறந்து வைக்கிறார். அவர்களுடன் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு.செல்வப்பெருந்தகை, எம்.எல்.ஏ., அவர்களும், – விடுதலைச்சிறுத்தை கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117–வது பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15–ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கெல்லாம், நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர – பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்களில் கிளை – வார்டுகளில் உள்ள அனைத்து கழகக் கொடிக் கம்பங்களிலும் கழக கொடியேற்றியும் அதன் அருகே அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தினை அலங்கரித்து வைத்தும், சர்க்கரை பொங்கல் – இனிப்பு வழங்கியும் வழக்கம் போல மிகவும் எழுச்சியுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117–வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

2025 – தி.மு.க. முப்பெரும் விழா முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் வருகிற 16.9.2025 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் கரூரில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர – பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.




திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் டெல்டா பகுதி உள்ள தொகுதி பொறுப்பாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், கோவி.செழியன், சி.வி. கணேசன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.